1970 மார்ச் 18]

திரு. அ. ஆறுமுகம்: இந்திய அரசிடம் இருந்து மாநில அரசு எந்த எந்த வகையில் கடன்களைப் பெற்றிருக்கிறது? இது வறட்சி, புயல் நிவாரணமாகப் பெற்ற கடனாக இருந்தால் அதை மத்திய அரசு தள்ளிவிட வேண்டும் என்று நமது மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புயல், வெள்ளம், வறட்சியைப் பொறுத்தவரையில் ஒரு பகுதிதான் கிராண்டாகக் கொடுக்கப்படுகிறது, பாக்கி கடனாகவேதான் கொடுக்கப்படுகிறது. இப்போது வறட்சி நிவாரணப் பணிக்கு 14 கோடி கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஏறக்குறைய 4 கோடிதான் கிராண்டாகக் கொடுத்திருக்கிறார்கள். பாக்கி எல்லாம் கடனாகத்தான் வழங்கப் பட்டிருக்கிறது. கொள்கை அளவில் எல்லாவற்றையும் கடனாகவே கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: மத்திய அரசு கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று மாநில அரசு கேட்பதுபோலவே, மாநில அரசு உள்ளாட்சிகளுக்குக் கொடுத்த கடன்களை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வேறு. அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: நம்மிடம் இருந்து வசூலிக்கிற வரிப் பணத்தை நமக்கே கடனாகத் தந்து, அதற்கு வட்டியும் பெற்று, திருப்பியும் கொடுக்கவேண்டுமென்று சொல்வது மார்வாரித்தனமாகாதா?

(சில உறுப்பினர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'மார்வாரித்தனம்' என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாது.

திரு. எஸ். இராமச்சந்திரன்: மாநிலங்களுக்குக் கடன் சுமை, அதிகரித்து வருகிறது என்று மற்ற மாநிலங்கள் எல்லாம் நிதிக்குழுவிடம் வற்புறுத்தி வருவது அரசுக்குத் தெரியுமா? தேசிய அபிவிருத்திக் கவுன்சில் நிதி வழங்குகிற முறையில் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு உறுப்பினருக்கு மற்ற மாநிலங்கள் வற்புறுத்தி வருவது தெரிகிறது. இந்த அரசும் தான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. அதுவும் என்னுடைய பட்ஜெட் உரையிலேயே எல்லா மாநிலங்களுக்குமாக ஒரு டெட் கமிஷன் போடவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறேன். பத்திரிகைகள் எல்லாமும் இந்தக் கருத்தை ஆதரித்து வலியுறுத்தி எழுதியிருப்பதையும் கனம் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு விவசாய அபிவிருத்திக் கழகம்

* 437 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், விவசாய அபிவிருத்திக் கார்ப்பொரேஷன் அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால், எத்தகைய ஆராய்ச்சிகள் நடத்தப்படும்? அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு (திருமதி) டாக்டர் சத்தியவாணிமுத்து : (அ) & (இ) மாநிலங் களில் வேளாண்மை வளர்ச்சிக் கழகங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஒன்று இந்திய அரசின் கருத்தில் இருந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்தகைய கழகம் ஒன்றை அமைக்குமாறு மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண் டது. ஆனால் இந்திய அரசு இத்திட்டத்தையே பின்னர் கைவிட்டு விட்டதால் இது செயல்படுத்தப்படவில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : இந்த வேளாண்மைக் கழகத்தின் நோக் கங்கள் என்ன? இதனால் விவசாயப் பெருமக்கள் என்ன நன்மை பெறுவார் கள் என்பதை விளக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆரம்பத்தில் உரு வாக இருந்த விவசாய வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம் கிணறுகள் வெட்டுதல், நிலங்களைப் பண்படுத்தல், கருவிகளையும், தேவையான பொருள்களையும் வாங் கிக்கொள்வதற்குப் பயிரிடுகிறவர்களுக்கு நடுத்தரக்காலக் கடன் வழங்கல், மற்றும் வாணிப முறையில் உரங்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலியவற்றை நிறுவனங்களின் கீழ் வழங்குதல்.

இதைத்தவிர துளைக் கிணறுகள் எடுக்க உதவுதல், விவசாயப்பொருள்களை விற்பனை செய்ய உதவுதல் போன்ற வேளாண்மை வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்துதல். அமெரிக்க உதவியுடன் மாநிலங்களுக்கு ஒவ்வொரு மாவட்டத் தில் இத்தகைய வளர்ச்சிக் கழகங்களை ஏற்படுத்த மத்திய சர்க்காரின் செயற் குறிப்பு ஒன்று இருந்தது. அதை அவர்கள் இப்போது கைவிட்டு சிறு உழவர் திட்டம் என்று ஒன்றை ஏற்படுத்த முன்வந்துள்ளனர். அதைத் தென்னாற்காடு மாவட்டத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கம் 2 மாவட்டங்களுக்கு சிறு உழவர் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : விவசாய அபிவிருத்திக் கார்ப்பரேஷனுடைய நோக்கங்களைப் பற்றிக் கூறினார்கள். இவற்றையே அரசாங்க இலாக்கா செய்து கொண்டிருக்கிறதே, தனியாக இப்படிப்பட்ட ஒரு கழகம் அமைத்துச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? மேலும் அப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப் படுகிறது என்கிறபோது தஞ்சை மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள் வானேன் மாநிலம் முழுவதற்கும் அதை ஏன் விஸ்தரிக்கக் கூடாது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது இந்திய அர சாங்கம் அமெரிக்காவிடம் இருந்து உதவி பெற்றுத் தருகிற ஒன்றாகும். நம் மாநிலத்திலேயே இப்படிப்பட்ட காரியங்கள் இலாக்கா மூலமாக நடை பெறுகின்றன என்றாலும் அமெரிக்கா கொடுக்கிற உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் இது அமைக்கப்படுகிறது. இந்திய சர்க்கார் மாநிலத்திற்கு ஒரு மாவட்டம் தான் என்றார்கள். அந்த அடிப்படையில் தஞ்சைமாவட்டம் எடுக் கப்பட்டது.

Supply of oil engines, etc. to agriculturists

*438 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Agro-Industries Corporation has decided to supply the needy agriculturists with oil engines and pumpsets direct; and

(b) if so, from which date?